தினகரன்
27.02.2018

# மாநில அளவிலான பூப்பந்தாட்ட போட்டி சென்னை அணி முதலிடம்

க.பரமத்தி, பிப்.27: டிஎன்பிஎல் காகித ஆலை சார்பில் நடந்த மாநில அளவிலான பூப்பந்தாட்டப்போட்டிகளில் சென்னை அணி முதலிடம் பெற்றது.

கரூர் ஒன்றியம், காகிதபுரம் என்பிஎல் சார்பில் 6ம் ஆண்டு மாநில அளவிலான பூப்பந்தாட்டப் போட்டிகள் கடந்த 24, 25ம்தேதி நடைபெற்றது. காகித ஆலை முதன்மை பொது மேலாளர் (உற்பத்தி) சுப்பிரமணியன் தலைமை வகித்து போட்டியை தொடங்கி வைத்தார்.

காகித ஆலை பொது மேலாளர் (மின்சாரம் - கருவியியல்) பாலசுப்பிரமணியன், தமிழ்நாடு மாநில பூப்பந்தாட்ட கழக தலைவர் நடேசன், செயலாளர் எழிலரசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். போட்டிகளில் சேலம், சென்னை, திண்டுக்கல், கோவை, வேலூர், மதுரை, திருச்சி, கடலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், தருமபுரி, பெரம்பலூர், ஈரோடு, விருதுநகர், தூத்துக்குடி, நாகர்கோவில், கரூர், நாமக்கல் ஆகிய மாவட்டங்களிலிருந்து 45அணிகள் ஆண்கள் பிரிவிலும், 22அணிகள் பெண்கள் பிரிவிலும் கலந்து கொண்டன.

இதில் ஆண்கள் பிரிவில் சென்னை செயின்ட் ஜோசப் தொழில்நுட்பக் கல்லூரி முதலிடம் பெற்றது. ஸ்ரீரங்கம் ஓபிபிசி அணி 2ம் இடமும், காஞ்சிபுரம் எஸ்ஆர்எம் குரூப் ஆப் இன்ஸ்ட்யூசன் அணி மூன்றாமிடமும், சென்னை பிளஸ் பாயிண்ட் அகடமி அணி 4ம் இடமும், டிஎன்பிஎல் அணி 5ம் இடமும் பெற்றன.

பெண்கள் பிரிவில் மைலாப்பூர் சிவசாமி கிளப் முதலிடமும், நாமக்கல் பாவை தொழில்நுட்பக் கல்லூரி அணி 2ம் இடமும், காஞ்சிபுரம் எஸ்ஆர்எம் குரூப் ஆப் இன்ஸ்ட்யூசன் அணிக்கு 3இடமும், கோவை நிர்மலா கல்லூரி அணி 4ம் இடமும் பெற்றன. ரொக்கப்பரிசு மற்றும் கோப்பைகள் வெற்றிபெற்ற அணிகளுக்கு வழங்கப்பட்டன.

விழாவில் காகித ஆலை துணை மேலாண்மை இயக்குநர் வெள்ளியங்கிரி, பொது மேலாளர் (மனிதவளம்) பட்டாபிராமன், செயல் இயக்குநர் (இயக்கம்) வெங்கடராமகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கரூர் டிஎன்பிஎல் சார்பில் நடந்த மாநில அளவிலான பூப்பந்தாட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற அணியினருக்கு பரிசு கோப்பையை காகித ஆலை செயல் இயக்குநர் வெங்கடராமகிருஷ்ணன் வழங்கினார்.